## றுஹுணு பல்கலைக்கழகம் - 2017

---------------------------------------------------

றுஹுணு பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கை பல்கைலக்கழகத்தின் உபவேந்தருக்கு 2018 யூலை 19 ஆந் திகதி வழங்கப்பட்டது

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---------------------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற் கொள்ளவில்லை. முகாமைத்துவதத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் ளைை ஆம் பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து றுஹுணு பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02**

நியமத்தின் நோக்கப் பந்தியின் பிரகாரம் காசாக உள்வரும் பாய்ச்சல் மற்றும் காசுச் செலவினம் விடயங்களிலும், அறிக்கையிடல் திகதியில் உள்ள காசு மீதி மாத்திரம் உள்ளடக்கப்பட்டு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக ஆதனங்கள், பொறிகள் என்பவற்றைக் கைப்பற்றுவதற்காக வழங்குனருக்கு எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய ரூபா 45,657,830 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு வெளிப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

(i) சொத்துக்களை இனங்காணும் மாதிரிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும், 2016 யூன் 30 ஆந் திகதி முடிவடைந்த 21 ஆவது நூற்றாண்டுக்கான உயர் கல்வி செயற்திட்டம் (HETC) மூலம் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 123,325,853 கூட்டுத் தொகையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 55 ஆவது பிரிவின் பிரகாரம் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்தொன்றை அகற்றும் போது அந்த சொத்துக்களுக்குரிய இனங்காணப்பட்ட மீள் மதிப்பீட்டு மிகை, திரண்ட மிகை அல்லது பற்றாக்குறைக்கு மாற்றப்பட வேண்டியுள்ளது. எனினும், 2014 ஆம் ஆண்டின் போது மீள்மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 2,315,000 பெறுமதியான மூன்று மோட்டார் வாகனங்கள் மீளாய்வாண்டில் அகற்றும் போது உரிய மோட்டார் வாகனங்கள் தொடர்பாக மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டிருந்த ரூபா 2,313,600 தொகை தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) Specific Agreement and Research Cooperation between the Swedish International Development Corporation Agency செயற்திட்டம் 2010 திசெம்பர் முடிவடைந்திருந்ததுடன் அதன் செயற்திட்டத்திற்கு உரித்தாக இருந்த ரூபா 6,300,000 பெறுமதியான வான் வண்டி பல்கலைக்கழகத்தால் பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்ற போதிலும், அதனை பல்கலைக்கழகத்திற்கு கையேற்று கணக்கீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான ஆதனங்களுக்காக மீளாய்வாண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்கு இணங்க செலுத்த வேண்டிய ஆதனவரி மற்றும் மிகைக்கட்டணங்கள் ரூபா 402,048 தொகை தொடர்பாக கணக்குகளில் நிதிஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டின் போது கிடைத்த வெளிவாரி நிதியியல் பாடநெறி வருமானம் ரூபா 84,399,021 தொகையில் எதிர்வரும் வருடங்களுக்காகக் கிடைக்கப் பெற்ற ரூபா 53,084,777 தொகை பிற்போடப்பட்ட வருமானமாக கணக்கீடு செய்யப்பட்ட வேண்டிய போதிலும், ரூபா 31,965,422 தொகை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக அந்தக் கணக்கின் மீதி ரூபா 21,119,355 குறைவாகவும், மீளாய்வாண்டின் பற்றாக்குறை அந்த அளவால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழக நிதியத்திலிருந்து செலவிடப்பட்ட ரூபா 107,658,030 தொகை உரிய சொத்தொன்றாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக செலவிடப்படாத மூலதன மானியங்கள் கணக்கில் வரவு மீதியொன்றாகக் (Capital Grant Unspent) காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2017 ஆகஸ்ட் 16 ஆந் திகதி கொள்வனவுகளுக்குரிய விலைப்பட்டியல் பத்திரத்தின் பிரகாரம் ரூபா 3,750,000 பெறுமதியான Automotive Test Bench என்ற பெயருடைய உபகரணம் ரூபா 4,162,500 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டமையினால் வழங்குனருக்குச் செலுத்த வேண்டிய தொகை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் என்பன ரூபா 412,500 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

02 கணக்கு விடங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மீதிக்கும் அதற்குரிய விரிவான பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிக்கும் இடையே ரூபா 1,086,681 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுமொத்தமாக ரூபா 11,188,851 தொகையான 03 வங்கி நடைமுறைக் கணக்குகளுக்குரிய மீதி உறுதிப்படுத்தல் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 போதியளவான அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2016 ஆம் ஆண்டின் பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பொறியியல் பீடத்தை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பல்கலைக்கழகத்திற்கு ரூபா 150 மில்லியன் வழங்கப்பட்டிருந்தும் பல்கலைக்கழக

மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் இன்றி அந்த தொகை ரூபா 33 மில்லியனால் விஞ்சி பொறியியல் பீடத்தினால் மூலதனச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்தது.

### 2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2017 இன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பல்கலைக்கழகத்துடன் ஏற்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கை மற்றும் பிணைமுறி என்பவற்றை மீறிய 18 விரிவுரையாளர்களிடமிருந்து 01 வருடத்திற்கும் 15 வருடத்திற்கும் இடையிலான காலப்பகுதிக்குரிய ரூபா 20,932,217 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காண்பிக்கப்படுகின்ற இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 135 ஆம் பிரிவு | பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படுகின்ற பட்டப்பின் படிப்பு பாடநெறிக்காக மாணவர்களை உள்ளீர்ப்பதற்கு காணப்பட வேண்டிய தகைமைகளை உள்ளடக்கி உபவிதியொன்று தயாரித்து நிர்வாக சபையின் மூலம் அங்கீகரித்துக் கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், பொருளியல் தொடர்பான கலைமானி பட்டம் மற்றும் வியாபார நிர்வாகமானி பட்டம் என்பவைகளுக்காக ஆரம்பம் முதல் அவ்வாறு உபவிதி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 இன் 06 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 116 ஆம் பிரிவு | (i) பல்கலைக்கழக பதவியணியினர்களுக்காக செலுத்தப்படுகின்ற மாதாந்த ஊதியம் மற்றும் படிகளின் கூட்டுமொத்தம் ரூபா 50,000 விஞ்சும் போது உழைக்கும் போது செலுத்தும் வரி கழிக்கப்பட்டு மாதந்தம் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 சனவரி முதல் யூலை வரையான காலப்பகுதியில் சில உத்தியோகத்தர்களிடமிருந்து குறைவாகவும், சில உத்தியோகத்தர்களிடமிருந்து அதிகமாகவும் வரித்தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் அந்தத் தொகை முறையே ரூபா 1,236,929 மற்றும் ரூபா 419,802 ஆகக் காணப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | | (ii) உழைக்கும் போதே செலுத்தும் வருமான வரி சுற்றறிக்கை இலக்கம் 01 இன் 2(ii) ஆம் பந்தியின் கீழ் உள்ளபடியான ஊழியர்களுக்கு வீட்டு வசதிகள், வாகன வசதிகள், வைத்திய சிட்டைகள், காப்புறுதி, மின்சாரம், தொலைபேசி பட்டியல் மற்றும் உபசரிப்புப் படிகளும் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய உழைக்கும் போதே செலுத்தும் வரி கணப்பீடு செய்யும் போது மேற்கூறப்பட்ட படி உரித்தாக்கிக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 மற்றும் 3.2 ஆம் பிரிவுகள் | சகல உயர்கல்வி நிறுவனங்களாலும் வருகைப் பதிவேடொன்று பேணிச் செல்ல வேண்டியிருந்ததுடன் உரிய நிறுவனத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற சகலருக்கும் தமது வரவு மற்றும் வெளிச்செல்கைப் பதிவேட்டில் அல்லது கைவிரல் அடையாள இயந்திரத்தில் பதியப்பட வேண்டும். எனினும், அதற்கு இணங்க செயற்படாதிருந்த கல்விசார் பதவியணியின் 515 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,356,629,469 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | (i) நிதிப்பிரமாணம் 381 | அலுவலக வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்காக திறைசேரியிலிருந்து (அரச கணக்குகள் திணைக்களம்) அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக்கழக சேகரித்தல் கணக்கு மற்றும் Money Market சேமிப்புக் கணக்கு தொடர்பாக தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டிருந்தும் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்தைக் கடந்திருந்த போதிலும், வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்த ரூபா 59,702 தொகையான 07 காசோலைகள் தொடர்பாக தொடர்புடைய நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) நிதிப்பிரமாணம் 571 | நிறுத்திவைத்தல் கணக்கில் 02 வருடங்களை விஞ்சிய ரூபா 23,540,673 கூட்டுத்தொகையான மீதியொன்று காணப்பட்டதுடன் அது தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (உ) | 2015 - 09 என்ற பல்கலைக்கழக நிதி உபகுழுத் தீர்மானம் | 2006 – 2010 வரை கட்டளையிடப்பட்ட நூலகப் புத்தகங்களுக்குரிய ரூபா 540,446 தொடர்பான தீர்த்து வைக்கப்படாத புத்தகக் கொள்வனவு முற்பணம் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வாளரால் அறிக்கையொன்று பெறப்பட்டு நிதிக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கை | முற்பணம் பெறப்பட்ட நிறைவு பெற்றதும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ஆராய்ச்சி முற்பணம் ரூபா 192,070 தொகை, நானாவித முற்பணம் ரூபா 525,000 தொகை, வெளிவாரி நிதிய முற்பணம் ரூபா 476,818 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 1,193,888 தொகை 2018 மே 31 வரையும் தீர்க்கப்படவில்லை. |
| (எ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 10,008,259,338 பெறுமதியான நிலையான சொத்துக்கள் (கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தவிர) தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 307,040,172 பெறுமதியான கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பாக தனியான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 165,850,112 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 76,040,206 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 89,809,906 ஆன வீழ்ச்சியொன்று தென்பட்டது. மீண்டெழும் செலவினத்திற்காக அரசின் மானியம் ரூபா 130,674,145 ஆல் அதிகரித்திருந்த போதிலும், ஊழியர் ஊதியம் ரூபா 176,087,719 ஆல் அதிகரித்தமை மேற்படி வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் பற்றாக்குறையொன்றும் 2015 ஆம் ஆண்டில் மிகையும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மீண்டும் பற்றாக்குறையொன்றும் ஏற்பட்டிருந்தன. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர்களது ஊதியம், வரி மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வினை மீண்டும் சீராக்கும் போது 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை பங்களிப்பு படிப்படியாக அதிகரித்திருந்தன. அதற்கமைய, 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 2,307,417,826 ஆகவிருந்த பங்களிப்பு 08 சதவீதத்தால் அதிகரித்தது மீளாய்வாண்டின் போது ரூபா 2,494,042,928 ஆக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் 1.48:1 முதல் 0.81:1 வரை வீழ்ச்சியடைந்திருந்தது.

**3.3 பல்கலைக்கழகத்திற்கு எதிராக அல்லது பல்கலைக்கழகத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் பல்கலைக்கழகத்தால் பல்வேறு தரப்பினர்களுக்கு எதிராக ரூபா 8,409,361 தொகையை அறவிடுவதற்காக மாவட்ட நீதிமன்றங்களில் 05 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

(ஆ) பல்கலைக்கழகத்திற்கு எதிராக பல்வேறு தரப்பினர்களால் உயர்நீதிமன்றத்தில் 07 வழக்குகளும், பல்கலைக்கழக மேன்முறையீட்டு சபையில் 09 முறைப்பாடுகளும், தொழில் நியாய சபையில் 08 முறைப்பாடுகளும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 03 வழக்குகளும், மேல்நீதிமன்றத்தில் 02 வழக்குகளும், மாவட்ட நீதிமன்றத்திலும் தொழில் இழப்பீட்டு ஆணையாளர் முன்னிலையில் 01 வழக்கும் வீதம் மொத்தமாக தொடரப்பட்ட 31 வழக்குகள் காணப்பட்டதுடன் அதில் ஒரு வழக்கிற்காக கோரப்பட்டிருந்த இழப்பீட்டுத் தொகை ரூபா 4,005,977 ஆகக் காணப்பட்டதுடன் அது நிதிக்கூற்றுக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பல்வேறு செயற்பாடுகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், அவற்றை நிறைவேற்றுவதற்காக உள்ள சந்தர்ப்பங்கள் (Opportunities) மற்றும் அச்சுறுத்தல் (Threats) தொடர்பாக சரியான மதிப்பீட்டிற்கு உட்பட்டிருக்கவில்லை.

(ஆ) காலரீதியில் அடையப்பட வேண்டிய இலக்குகளைத் (Targets) தாபித்தல் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்ளும் பொறுப்புக்கள் செயற்படுநிலை வரை தர்க்க ரீதியான அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 2017 நவம்பர் 06 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களை உள்ளடக்கி அந்த வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) நிறுவனத்தின் நிறுவகக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போதுள்ள பதவியணியினர் தொடர்பான விபரம்.
(ii) உரிய ஆண்டிற்கான பாதீடு
(iii) வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயற்பாடுகள்
(iv) பெறுகைகள் திட்டம்
(v) உள்ளகக் கணக்காய்வுத் திட்டம்

## 4.1.2 செயற்படுநிலையும் மீளாய்வும்

பல்கலைக்கழகத்தின் நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2018 ஆம் ஆண்டளவில் பல்கலைக்கழகத்தில் உள்ளீர்க்கப்பட்ட மொத்த மாணவர் எண்ணிக்கை 1,860 முதல் 2,340 வரை அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், 06 பீடங்களுக்காக திட்டமிடப்பட்ட மாணவர் எண்ணிக்கையை விட 339 மாணவர்கள் குறைவாக உள்ளீர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) 2017 ஆம் ஆண்டளவில் பட்டத்தைப் பெற்று 06 மாதங்களில் ஒட்டுமொத்த பட்டதாரிகளின் (மருத்துவ பட்டதாரிகள் தவிர) வேலை வாய்ப்புத் தன்மை 85 சதவீதம் வரை அதிகரித்துக் கொள்ளும் இலக்கு அடையப்பட்டிருந்த போதிலும், பொறியியல் பட்டதாரிகள் தவிர ஏனைய சகல பட்டதாரிகளினதும் வேலைவாய்ப்புத் தன்மை 85 சதவீதத்திற்கு கீழ் மட்டத்தில் காணப்பட்டது. அதனிடையே கலைப் பட்டதாரிகளின் வேலைவாய்ப்புத் தன்மை 37 சதவீதமான மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(இ) பல்கலைக்கழகங்களின் உலக தரமிடல் பட்டியலில் (Times Higher Educational and QS Ranking list) ஆரம்ப 2000 இற்கிடையில் கொண்டுவருவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த நோக்கத்தை அமைய முடியாமலிருந்தது. ‘‘வெபோமெட்ரிக்ஸ்’’ தரமிடல்களின் பிரகாரம் றுஹுணு பல்கலைக்கழகம் உள்நாட்டு தரமிடல் பட்டியலில் 2017 ஆம் ஆண்டில் 5 ஆவது இடத்தை உரித்தாக்கிக் கொண்டிருந்தது.

(ஈ) (i) விவசாய பீடத்தில் பட்டப்பின் பட்ட பாடநெறியை பின்பற்றுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையை வருடாந்தம் 5 சதவீதத்தால் அதிகரித்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், பீடம் அறிமுகப்படுத்தியிருந்த 07 பட்டப்பின் படிப்பு பாடநெறிகளில் 06 பாடநெறிகள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. அமுல்படுத்தப்பட்ட MSC in Crop Production Technology பாடநெறிக்காகவும் 2015 ஆம் ஆண்டின் பின்னர் மாணவர்கள் உள்ளீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தொலைக்கல்வி மற்றும் தொடர்ச்சியான கல்விப்பிரிவின் மூலம் நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற 04 சான்றிதழ் பத்திர பாடநெறிகள் விவசாய பீடத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த 04 பாடநெறிகளும் 2017 ஆம் ஆண்டின் இறுதிவரை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) (i) இயந்திர மற்றும் உற்பத்தி பொறியியல் கற்கைப் பிரிவிற்காக மேலதிகமாக 25 மாணவர்களைச் சேர்ப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஆட்சேர்ப்பு இடம்பெறவில்லை.

(ii) பொறியியல் பீடத்தின் விரிவுரையாளர் பதவியணியில் மூன்று பேர் 2017 ஆம் ஆண்டின் போது கலாநிதி பட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு (PHD) இலக்கிடப்பட்டிருந்த போதிலும், இரண்டு விரிவுரையாளர்கள் உரிய இலக்கை பூர்த்தி செய்திருக்கவில்லை.

(ஊ) 11 பட்டப்பாடநெறிகளுக்காக உள்ளடக்கக் கூடியதாக இருந்த மாணவர்களின் எண்ணிக்கை 1,090 ஆக இருந்த போதிலும், உள்ளபடியாக அந்த 11 பாடநெறிகளுக்காகவும் உள்ளீர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 1009 ஆக மாத்திரம் இருந்தது. அதன் பிரகாரம் பல்கலைக்கழகத்தில் தகைமை பெறுவதற்கு இருந்த மேலும் 81 மாணவர்களுக்கு உள்நுழைவதற்கான சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

(எ) முன்னைய ஆண்டில் முகாமைத்துவ மற்றும் நிதியியல் பீடத்தில் 36 மாணவர்கள் சித்தியடையாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் அந்த மாணவர்கள் 122 வரை அதிகரித்திருந்தது. அது பரீட்சைக்குத் தோற்றிய மொத்த மாணவர்களில் 35 சதவீதத்தைக் கொண்டிருந்தது.

(ஏ) மானிட கற்கைகள் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தில் முன்னைய ஆண்டில் 54 மாணவர்கள் பட்டப் பரீட்சையில் சித்தியடையாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் அந்த மாணவர்கள் 97 வரை அதிகரித்திருந்ததுடன், அது பரீட்சைக்குத் தோற்றிய எண்ணிக்கையில் 18 சதவீதத்தைக் கொண்டிருந்தது.

(ஐ) மருத்துவ பட்டத்திற்கான பட்டப் பரீட்சைக்குத் தோற்றிய எண்ணிக்கையில் 22 பேர் சித்திபெறாது அல்லது குறைவாக சித்தி பெற்றிருந்தனர். அது பரீட்சைக்குத் தோற்றிய எண்ணிக்கையில் 30 சதவீதமாகும்.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த Specific Agreement and Reserch Cooperation between Swedish International Devlelopment Cooperation Agency செயற்திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்பட்ட சொத்துக்களின் பட்டியலொன்று தயாரித்து அந்த சொத்துக்களை முறையான பிரகாரம் கடற்றொழில் மற்றும் சமுத்திர விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பீடத்தின் பீடாதிபதிக்கு கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்த நடவடிக்கைகள் இடம்பெறாதிருந்ததுடன் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்திற்குரிய ஆதனவரி செலுத்துகின்ற 11 ஆதனங்களுக்காக மீளாய்வாண்டு வரையும் ஆதனவரி அவற்றின் ஆரம்ப உரிமையாளரின் பெயரில் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த ஆதனங்களின் உரித்தை பல்கலைக்கழகத்தின் பெயருக்கு கையேற்பதற்கும், பல்கலைக்கழகத்தின் பெயரில் ஆதனவரி சிட்டைகளைத் திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) விவசாய பீடத்தில் கல்வி பயிலுகின்ற 830 எண்ணிக்கையிலான சகல மாணவர்களும் கணனி மற்றும் தகவல் தொழில்நுட்ப பாடமொன்றாக பயிலுகின்ற போதிலும், 2 கணனி ஆய்வுகூடங்களை கொண்ட கணனிப் பிரிவில் மாணவர்களின் பாவனைக்காக செயற்படு நிலையில் காணப்பட்ட கணனிகளின் எண்ணிக்கை 06 மாத்திரமாக இருந்தது. 19 கணனிகள் செயற்படமுடியாத நிலையில் காணப்பட்டது.

(ஈ) பல்கலைக்கழக கிராம நிகழ்ச்சித்திட்ட செயற்திட்டத்திற்கான மொத்தக் கிரயமாக ரூபா 2,512.8 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2017 இன் பாதீட்டில் ரூபா 50 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் நிதிஏற்பாடுகளில் ரூபா 40 மில்லியன் நிகழ்ச்சித் திட்ட நிதியங்களுக்கு இணங்காத பீடம் மற்றும் நிர்வாக பிரிவுகளின் மூலதனச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக ஒதுக்குவதற்கு 2017 யூலை 10 ஆந் திகதிய 370 ஆவது நிர்வாக சபைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(உ) ஹொங்கொங்கில் International Economic Development and Research Center என்ற நிறுவனத்தில் நடாத்தப்பட்ட மாநாட்டிற்கு ஆராய்ச்சி பத்திரம் சமர்ப்பித்த 04 மாணவர்களுக்கு அந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்கு பல்கலைக்கழகத்தால் மாணவர் ஒருவருக்கு ரூபா 100,000 வீதம் கூட்டுமொத்தமாக ரூபா 400,000 தொகை உபவேந்தர் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. வெளிநாடு செல்வதற்காக மாணவர்களுக்கு ஆலோசனை மற்றும் சரியான வழிகாட்டல்கள் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படாமையின் காரணமாக வீசா பெறுவதற்கு முடியாமையின் அடிப்படையில் மாநாட்டில் பங்குபற்றுவதற்கு இருந்த பெறுமதியான சந்தர்ப்பம் கைநழுவியிருந்தது. அதன் பிரகாரம் ஒரு மாணவரிடமிருந்து ரூபா 50,000 வீதம் கூட்டுமொத்தமாக ரூபா 200,000 தொகை மீள அறவிடப்பட்டிருந்த போதிலும் பல்கலைக்கழகத்தால் செலுத்தப்பட்ட எஞ்சிய ரூபா 200,000 தொகையான பணம் சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்களுக்குள்ளாகியிருந்தது.

(ஊ) 2018 ஆகஸ்ட் 02 இல் உள்ளவாறு கூட்டுமொத்தமாக ரூபா 275,166,473 தொகையான அவதானிப்புக்கள் உள்ளடங்கிய 04 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) வியாபார நிர்வாக பட்டப்பின் படிப்பு பாடநெறியைப் பின்பற்றுகின்ற 37 பேர்களிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கூட்டுமொத்தமாக ரூபா 3,003,300 தொகையான பட்டப்பாடநெறிக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அதில் 15 பேர்களின் பட்டச்சான்றிதழ் விநியோகிக்கப்பட்டிருந்தது.

(ஏ) நீண்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற செலுத்தப்படாத மாணவர் உதவிப்பணம் மற்றும் மஹாபொல கணக்குகளில் 2017 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதி முறையே ரூபா 12,264,450 மற்றும் ரூபா 2,087,500 ஆகக் காணப்பட்டதுடன் அந்த மீதிகளை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்**

சம சுகாதாரப் பீடத்திற்குரிய தாதியர் பட்டப்பாடநெறி 2008 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு இதுவரையில் 04 மாணவர் குழுக்களில் மொத்தமாக 145 மாணவர்கள் பட்டத்தைப் பூர்த்தி செய்து வெளியேறியுள்ளனர். அவர்களுக்கு தொழிற்தகைமை ஏற்றுக்கொள்ளல்களுக்காக தேவையான இலங்கை தாதியர் சபையினால் பதிவுச் சான்றிதழ் (Accreditation) பாடநெறியைப் பெற்றுக் கொள்வதற்கு 2017 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் முடியாதிருந்தது.

**4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 24(ஈ) மற்றும் 27(1) ஆம் உபபிரிவு என்பவற்றின் பிரகாரம் பல்கலைக்கழகத்திற்காக பீடமொன்று அல்லது பீடக் கையளித்தல் அதிகாரம் அமைச்சருக்குச் சொந்தமாக இருந்த போதிலும், அதற்கு இணங்காத வகையில் றுஹுணு பல்கலைக்கழகத்தின் பட்டப்பின்படிப்பு கற்கைப் பீடத்தை கையளித்தல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஆணைக்குழுவிற்கு அவ்வாறான அதிகாரம் காணப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) 1985 இன் 07 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 28 ஆம் பிரிவின் மூலம் திருத்தப்பட்ட 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 48(அ)2 ஆம் உப பிரிவின் பிரகாரம் பட்டப்பின் படிப்பு கற்கைப் பீடத்தின் கட்டமைப்பு, அதிகாரம், பணிகள் மற்றும் இலக்குகள் மற்றும் அந்தப் பீடத்தின் பீடாதிபதியை நியமித்தல் அல்லது தெரிவு செய்வதற்கான செயல் நடைமுறை ஆணைக்குழுவினால் விஞ்ஞாபனம் மூலம் குறித்துரைக்கப்பட வேண்டியுள்ளது. எனினும், றுஹுணு பல்கலைக்கழகத்தின் பட்டப்பின்படிப்பு கற்கைப் பீடத்திற்காக அவ்வாறு குறித்துரைக்கின்ற விஞ்ஞாபனமொன்று 2018 மே 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வியாபார நிர்வாக மானி பட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வியாபார நிர்வாகமானி பட்டத்திற்காக விண்ணப்பதாரர்களை உள்ளீர்ப்பதற்கு பட்டப்பின்படிப்பு கற்கைப் பீடத்திற்காக பொது உப விதியொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும், அதற்காக நிர்வாக சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 45(2) ஆம் உபபிரிவின் பிரகாரம் உப விதியொன்றை தயாரிக்கும் அதிகாரம் கட்டுப்பாட்டுச் சபைக்கு கையளிக்கப்பட்டமையால் வியாபார நிர்வாக மானி பட்டத்திற்காக அதிகாரமுள்ள பீடத்தால் தயாரிக்கப்பட்ட பொது உப விதி முழுமையாக ஏற்றுக்கொள்ளக்கூடிய விதியா என்பது சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது.

(ii) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 46(6)(VIII) ஆம் உபபிரிவின் பிரகாரம் கற்கைப் பாடநெறிகளுக்கு விண்ணப்பதாரர்களை உள்ளீர்ப்பதற்காக காணப்பட வேண்டிய தகைமைகள் கட்டுப்பாட்டுச் சபைக்கு சிபாரிசு செய்யும் அதிகாரத்தை உறுதிப்படுத்துதல் சபைக்குச் சொந்தமாக இருந்த போதிலும், அதற்கு இணங்காத வகையில் 2017 ஏப்ரல் 05 ஆந் திகதி நடைபெற்ற 36 ஆவது முகாமைத்துவ மற்றும் நிதியியல் பீடத்தின் கற்கைப் பதவியணியின் கூட்டத்தில் (BOS) வியாபார நிர்வாகமானி பட்டத்திற்காக உள்ளடக்குவதற்குத் தேவையான தகைமைகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

(iii) தீர்மானிக்கப்பட்ட தகைமைகளில் 03 ஆம் இலக்கத்தின் கீழ் இலங்கைக் கணக்கீட்டு பயிற்சி நிறுவனத்தின் பரீட்சையில் உயர் மட்ட நிலையில் பூர்த்தி செய்தல், இலங்கை பட்டயக் கணக்காளர் முழு அங்கத்துவத்துடன் சமமான தகைமையாகக் கருதி வியாபார நிர்வாக மானி பட்டப்பின் படிப்பு கற்கை பாடநெறிக்காக விண்ணப்பிப்பதற்கு தகைமையொன்றாக பீடத்தின் கற்கை பதவியணியினால் தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் அது தர்க்க ரீதியில் இல்லாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) பொறியியல் பீடத்தினால் தனியார் நிறுவனமொன்றிலிருந்து கலி பவுசர் சேவையினைப் பெற்று ஒரு பிரயாண தடவைக்கு ரூபா 8,500 வீதம் 57 பிரயாண தடவைகளுக்காக ரூபா 484,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. பாதுகாப்பு பிரிவில் காணப்பட்ட வாகன வருகை மற்றும் வெளிச்செல்கை பதிவேடுகளின் பிரகாரம் 25 கிலோமீற்றர் அளவிலான தூரத்தில் கழிவுப்பொருட்களை போக்குவரத்துச் செய்வதற்கும் கழிவுப்பொருட்களை ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் எடுக்கப்பட்டிருந்த சராசரிக் கிரயம் 38 நிமிடங்கள் ஏற்றுக் கொள்ள முடியாத குறுகிய காலமாக இருந்தது. அதன் பிரகாரம் உரிய கொடுப்பனவுகளைச் செய்வதற்கு முன் அதன் சரியான தன்மை உறுதிப்படுத்தப்படாமையினால் இந்தக் கொடுப்பனவு சர்ச்சைக்குரிய தன்மையினதாக இருந்தது.

**4.5 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மருத்துவ பீடத்திற்குரிய மருந்தாளர் பட்டப்பாடநெறி நிலையத்தில் கணனி ஆய்வு கூடத்திற்காக Dell வகையின் 20 கணனிகள் 2011 மே 31 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட 20 கணனிகளில் 07 கணனிகள் கணனி ஆய்வு கூடத்தில் நீண்ட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் மேலும் 06 கணனிகள் பழுதுபார்த்தலுக்காக 2017 பெப்ரவரி 23 ஆந் திகதி மருத்துவ பீடத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், 2017 ஒக்தோபர் 11 கணக்காய்வு திகதி வரையிலும் மீண்டும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 ஆந் திகதி மருத்துவ பீடத்திற்குரிய தாதியர் பட்டப்பாடநெறிக்காக ரூபா 495,600 பெறுமதியான HP வகையின் 07 Laptop கணனிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2018 யூன் 30 வரையும் அதில் 05 கணனிகள் உரிய மென்பொருள் உள்ளடக்கப்பட்டு பாவனைக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.6 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) கல்விசார் பதவியணியினர்**

(i) பொறியியல் பீடத்தின் அங்கீகரிக்கப்பட்ட 04 பேராசிரியர் பதவிகள் ஆரம்பம் முதலே வெற்றிடமாகக் காணப்பட்டது.

(ii) பல்கலைக்கழகத்திற்குரிய 09 பீடங்களில் விரிவுரையாளர் பதவிகளில் 188 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதில் மருத்துவ, பொறியியல் மற்றும் விஞ்ஞானம் போன்ற பீடங்களில் வெற்றிடங்களின் எண்ணிக்கை முறையே 42, 25 மற்றும் 33 என்ற உயர் பெறுமதியைக் கொண்டிருந்தது. 2018 மே 31 வரையிலும் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கல்விசாரா பதவியணியினர்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 நவம்பர் 04 ஆந் திகதி முதல் வெற்றிடமாகக் காணப்படுகின்ற காசாளர் பதவிக்காக 10 சந்தர்ப்பங்களின் போது விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. தகைமைகளைப் பூர்த்தி செய்த மூன்று விண்ணப்பதாரர்களை நேர்முகப் பரீட்சைக்காக அழைப்பு விடுப்பதற்கு 06 மாதம் முதல் 08 மாதம் வரையிலான காலம் தாமதமடைந்ததன் காரணமாக அந்த மூவரும் நேர்முகப் பரீட்சைக்காக சமூகமளித்திருக்கவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு முடியாதிருந்தது.

(ii) 02 வேலை பொறியியலாளர் பதவிகள் 2010 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அதற்காக 07 சந்தர்ப்பங்களின் போது விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதிலும், 2018 மே 31 ஆந் திகதி வரையிலும் தேவையான ஆட்சேர்த்தல்களைச் செய்வதற்கு முடியாதிருந்தது.

(iii) கல்விசாரா பதவியணியினரில் 10 பதவிநிலைப் பதவிகள், பதவிநிலையல்லாத 45 பதவிகள், 63 சிற்றூழியர் பதவிகள் என்பன வெற்றிடமாகக் காணப்பட்டன. எனினும், இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 03 பிரிவுகளில் மாத்திரம் சேவையாற்றியிருந்த எழுதுவினைஞர் மற்றும் சமாந்தர தரங்களின் பதவியணியினர் எண்ணிக்கை 278 ஆக இருந்ததுடன் அதில் 20 பேர் 05 வருடங்கள் முதல் 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக ஒரு பிரிவில் சேவையாற்றியிருந்தனர்.

(v) பல்கலைக்கழகத்தின் உள்ளகப் பாதுகாப்பு பிரிவின் பதவியணியினர் 124 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை 94 ஆகும். அதன் பிரகாரம் வெற்றிடங்களின் எண்ணிக்கை 30 ஆக இருந்ததுடன் அந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்க்கப்படாமல் 2017 சனவரி முதல் 65 தனியார் பாதுகாப்பு ஊழியர்களின் சேவை பெறப்பட்டிருந்தது. அது வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று இரண்டு மடங்கு அதிகமாகும். அந்த தனியார் பாதுகாப்பு சேவைக்காக 2017 சனவரி முதல் யூலை வரை மாத்திரம் ரூபா 14,322,710 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பல்கலைக்கழகம் செலுத்தப்பட்டிருக்கும் போது பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு ஊழியர்களுக்கும் மேலதிக நேரமாக அந்தக் காலப்பகுதியில் ரூபா 7,484,926 தொகை பாதுகாப்பு சேவையினை பெற்றுக்கொள்ளும் போது பொருளாதார ரீதியில் ஆக்கபூர்வமான முறையில் நடவடிக்கை எடுக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

---------------------------------------------

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதல்

------------------------------------------------------------------------------------------

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய றுஹுணு பல்கலைக்கழகத்தால் தமது விடயப்பரப்பின் கீழுள்ள பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டியுள்ளது தொடர்பாக அறிவிக்கப்பட்டிருந்தது.

(அ) மேற்கூறப்பட்ட பிரகாரம் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக தெளிவுபடுத்தியதன் அடிப்படையில் பல்கலைக்கழகத்தால் தமது விடயப்பரப்பின் பிரகாரம் அடையப்பட வேண்டிய நோக்கங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் அது தொடர்பான இலக்கு, அடிப்படையாகக் கொள்ளப்பட்ட தரவுகள், இலக்குகளை அடையக்கூடிய கட்டங்கள் போன்ற செயல்முன்னேற்றங்களை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்வதற்கு தயாராகும் போது ஏனைய நிறுவனங்களுடன் சரியான தொடர்பொன்று ஏற்படுத்தாமையின் காரணமாக இலக்கிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் முன் ஆயத்தங்களின் செயல்வழிகள் மிகவும் மந்தகதியில் அல்லது நலிவான நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், வருடாந்த நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் விநியோகிக்கப்பட்ட 2017 திசெம்பர் 29 ஆந் திகதிய விலே/பொது/2017/142 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் தேவையான பட்டோலைகள் மற்றும் உபயோகப் பதிவேடுகள் அன்றைய தினமே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் பட்டோலைகளுடன் நிதிக்கூற்றுக்கள் முறையான பிரகாரம் 2018 ஏப்ரல் 11 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 6.2 உள்ளக கணக்காய்வு

07 பதவியணியினர்களைக் கொண்ட உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 133(2) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அலகின் பணிகள் மற்றும் அவற்றின் விடயப் பரப்பு என்பவற்றை மேவுகை செய்யும் வகையில் பல்கலைக்கழகத்தில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 134(3) இன் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் காசு நடவடிக்கைகளுக்குரிய உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.3 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

#### 6.3.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விவசாய பீடம் மற்றும் மருத்துவ பீடங்களுக்காக பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக முறையே ரூபா 96 மில்லியன் மற்றும் ரூபா 22 மில்லியன் தொகையான பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், நிதிஏற்பாடுகள் ரூபா 8 மில்லியன் மற்றும் ரூபா 12 மில்லியன் தொகை மாத்திரமே ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் உள்ளபடியான செலவினம் ரூபா 07 மில்லியன் மற்றும் ரூபா 11 மில்லியன் மாத்திரமாக இருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்திற்காக பொதுவாக சிற்றுண்டிச்சாலைக்கு பொருத்தமான மேசை மற்றும் கதிரை மாதிரிகள் வடிவமைக்கப்படாமல் பொறியியல் பீடத்தின் 01 ஆம் இலக்க சிற்றுண்டிச்சாலைக்காக ரூபா 2,375,923 தொகை செலவில் விலைகூடிய மரத்திலான மேசை மற்றும் வாங்குகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 02

ஆம் இலக்க சிற்றுண்டிச்சாலைக்கு மேற்கூறப்பட்ட விலைகளை விட குறைந்த பெறுமதியான பைபர் வகையின் மேசை மற்றும் கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேற்கூறப்பட்ட கொள்வனவுகளுடன் 01 ஆம் இலக்க சிற்றுண்டிச்சாலைக்கு 2013 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 95,200 தொகையான நல்ல நிலையிலுள்ள 10 மேசைகளை அகற்ற வேண்டி ஏற்பட்டிருந்தது.

(இ) விவசாய பீடத்தில் 2017 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் 60 Desktop கணனிகள், 60 Laptop கணனிகள், 01 Scanner மற்றும் 10 UPS என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் எந்தவொன்றும் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 6.3.2 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடு

ரூபா 94 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட பொறியியல் பீடத்தின் புதிய நூலகக் கட்டிடம் 2015 ஏப்ரல் 22 இல் பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், கட்டிடத்தின் சுவர், கொங்கிறீட் பீம் மற்றும் தூண்கள் வெடித்திருந்தமை மற்றும் உடைந்திருந்தமை என்பவற்றுக்குள்ளாகியிருந்த 170 இடங்கள் அவதானிக்கப்பட்டதுடன் முதலாவது மாடியினதும், இரண்டாவது மாடியினதும் சுவரில் நீர்க்கசிவு ஏற்பட்ட 03 இடங்கள் அவதானிக்கப்பட்டன. மேலும், மின்சார முறைமை முறையான பிரகாரம் அமைக்கப்படாதிருந்தமையால் மின் தடை ஆழி (Trip Switch) செயற்படாமையின் காரணமாக கட்டிடத்தில் பொருத்தப்பட்ட 03 ஆழிகளில் (Network Switch) ரூபா 624,094 பெறுமதியான 2 ஆழிகள் முழுமையாக அழிவடைந்திருந்ததுடன் மற்றைய ஆழியின் ஒரு பகுதி செயலிழந்திருந்தது.

### 6.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான 64 செலவின விடயங்களில் பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 25 சதவீதம் முதல் 559 சதவீதம் வரை கவனத்தில் கொள்ளக்கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 6.5 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள்

முன்னைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் மூலம் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கீழே விபரம் காண்பிக்கப்படுகின்ற கணக்காய்வு பந்திகள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பல்கலைக்கழகம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(அ) கடற்றொழில், சமுத்திரவியல் மற்றும் தொழில்நுட்ப பீடத்தின் மூலம் 2006 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை அமுல்படுத்தப்பட்டிருந்த Specific Agreement on Research Cooperation Between the Swedish International Development Co-operation Agency என்ற செயற்திட்டத்தின் கீழ் உயர்கல்வி வசதிகளை பூர்த்தி செய்வதற்காக எந்தவொரு பிணை முறியிலும் கைச்சாத்திடாமல் தற்காலிக விரிவுரையாளர் ஒருவருக்கும், நிரந்தர விரிவுரையாளர் ஒருவருக்கும் கூட்டுமொத்தமாக ரூபா 1,740,622 நிதியுதவி வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2017 திசெம்பர் 31 வரையிலும் அந்த விரிவுரையாளர்கள் உயர்கல்வி தகைமைகளைப் பூர்த்தி செய்து சேவைக்கு அறிக்கையிடப்படாமையின் காரணமாக ஏற்பட்ட செலவினத்திற்கு எந்தவொரு பிரதிபலனும் பல்கலைக்கழகத்திற்கு கிடைக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) (i) விவசாய பீடத்தின் உணவு மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞான கற்கைக்காக தேவையான விஞ்ஞான உபகரணங்கள் ஜேர்மன் நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்வதற்காக 04 வருடங்களுக்கு முன்னர் ரூபா 751,463 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், அந்த உபகரணங்கள் 2014 ஆம் ஆண்டின் மார்ச் வரையிலும் பல்கலைக்கழகத்திற்கு கிடைத்திராத போதிலும், அது தொடர்பாக எந்தவொரு பின்தொடர் நடவடிக்கைகளுமின்றி மீண்டும் ஒரு தடவை ரூபா 329,179 தொகை செலவில் இந்தியாவிலிருந்து உபகரணங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது.

(ii) எனினும் கட்டளையிடப்படாத பொருட்களின் கிடைப்பனவு மற்றும் பல்வேறு குறைபாடுகளின் காரணமாக அந்த உபகரணங்கள் பல்கலைக்ககழகத்திற்குக் கிடைத்து மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் 02 வருடங்களை விஞ்சியிருந்த போதிலும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதிருந்தது.

(iii) மேற்கூறப்பட்ட பந்தி இலக்கம் (ஆ)(i) இல் காண்பிக்கப்பட்டுள்ள பொருட்கள் இலங்கை சுங்க அதிகாரசபைக்குரிய ஊறுகொடவத்த களஞ்சியத்தில் வைத்து 2016 மே 04 ஆந் திகதி விடுவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2013 நவம்பர் 25 ஆந் திகதி முதல் 2016 ஏப்ரல் 29 ஆந் திகதி வரை 887 நாட்கள் பொருட்கள் களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டமைக்காக ரூபா 88,700 களஞ்சியக் கட்டணமும், விமான நிலையக் கட்டணமாக ரூபா 30,750 தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 119,450 தொகை செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது. அதற்குரிய உத்தியோகத்தர்களின் தாமதம் மற்றும் கவனமின்மையால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டமாக இருந்த போதிலும், அது தொடர்பாக நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உலக சுகாதார அமைப்பின் செயற்திட்டத்திற்குரிய மருத்துவ பீட நிதியக் கணக்கில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,764,410 மீதியொன்று காணப்பட்டது. 2015 செப்தெம்பர் 09 மற்றும் 2017 சனவரி 17 போன்ற திகதிகளில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பதிலின் மூலம் மேற்கூறப்பட்ட நிதியக் கணக்கின் மீதியை பீடத்தின் புதிய பேரூந்து ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தும் எதிர்பார்ப்பில் இருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 மே 31 ஆந் திகதி வரையிலும் அது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6.6 சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகுகின்றன.

(அ) பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனையால் ஏற்படுகின்ற நேரடியான மற்றும் மறைமுகமான சுகாதார, சுற்றாடல் மற்றும் சமூக தாக்கங்களை குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் பல்வேறு அரச நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி அமுல்படுத்த முடியுமாக இருந்த போதிலும், பல்கலைக்கழகம் அது தொடர்பாக போதியளவான கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) கீழே காண்பிக்கப்படுகின்ற சுற்றாடலுக்கு இசைவான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பில் பல்கலைக்கழகம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(i) தற்போதுள்ள தடைசெய்யப்பட்டுள்ள மைக்ரோன் 20 இற்கு குறைந்த பொலித்தீன் பை, மற்றும் உணவு சுற்றுபவைகளை பல்கலைக்கழகத்தில் எடுத்து வருவதற்கு தடை செய்தல்.

(ii) மைக்ரோன் 20 இற்கு மேற்பட்ட பொலித்தீன் மற்றும் ஏனைய பொருட்கள் மற்றும் பிளாஸ்டிக் என்பவற்றைக் கொண்டுவருவதைக் கட்டுப்படுத்துதல்.

(iii) பல்கலைக்கழகத்தில் உணவு கொண்டு வரும் போது பிளாஸ்டிக், பொலித்தீன் பை மற்றும் உணவு சுற்றும் கடதாசி என்பவற்றுக்குப் பதிலாக சுற்றாடலுக்கு இசைவான உறையிடும் முறைமை தொடர்பில் மாணவர்களையும் பதவியணியினர்களையும் ஊக்குவித்தல்

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றம் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | நிறுவனத்திற்குக் கிடைக்கின்ற பொருட்களுக்காக பொருள் பெறுவனவுக் குறிப்பு விநியோகிக்கப்படாமை. |
| (ஆ) கணக்கீடு | தனித்தன்மையான கணக்கீட்டுக் கொள்கையொன்று பின்பற்றப்படாமை, இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் சரியாக பயன்படுத்தப்படாமை, செலுத்த வேண்டிய செலவினங்களுக்காக நிதிஏற்பாடு ஒதுக்கப்படாமை, வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்படாமை, செலவிடப்படாத மூலதன மானியங்கள் சரியாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாமை மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக இனங்காணப்படாமை. |
| (இ) காசு மற்றும் வங்கிச் செயற்பாடுகள் | கிடைக்க வேண்டிய பணம் துரிதமாக தீர்த்து வைக்கப்படாமை, அலுவலக வங்கிக் கணக்குகள் ஆரம்பிப்பதற்காக திறைசேரியிலிருந்து அங்கீகாரம் பெறப்படாமை, வங்கி நடைமுறைக் கணக்குகளுக்குரிய காசுப் புத்தக்களின் மீதி மேலதிகப்பற்றாக இருந்தமை மற்றும் விநியோகிக்கப்பட்டு காலாவதியான காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை. |
| (ஈ) முற்பண நடவடிக்கைகள் | முற்பணம் தீர்க்கப்படாமை. |
| (உ) பதவியணியினர் முகாமைத்துவம் | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை, பதவி வெற்றிடங்களுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாமை. |
| (ஊ) பாதீட்டுக் கட்டுப்பாடு | சரியான எதிர்வுகூறலின்றி பாதீடு தயாரித்தல் மற்றும் பாதீடு செய்யப்பட்ட இலக்கை பூர்த்தி செய்வதற்காக பின்தொடர் நடவடிக்கைகள் எடுத்து அதன் பிரகாரம் பாதீட்டைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (எ) ஒப்பந்த நிர்வாகம் | கட்டிட நிர்மாணங்களின் தரத்தன்மை உறுதிப்படுத்தப்படாமை |